
# மழலைப் பாக்கள்



நல்லூர் பிரதேச செயலக நூலகத்திற்கு

சிதம்பரபத்தினி

A. KUMARATHASAN
49 KALAIMAGAL ROAD
ARIYALAI WEST
JAFFNA

A. KUMARATHASAN
49 KALAIMAGAL ROAD
ARIYALAI WEST
JAFFNA

# மழலைப்பாக்கள்

ஆக்கம்:

– சிதம்பர பத்தினி–



அமரர்
**திருமதி பரமேஸ்வரி சிவானந்தன்**
அவர்களிற்கு
**சமர்ப்பணம்**

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | மழலைப்பாக்கள் |
| ஆசிரியர் | : | 'சிதம்பர பத்தினி'<br>மெதடிஸ் மிஷன் பாடசாலை வீதி,<br>ஆனைக்கோட்டை.<br>தொலைபேசி: 021-222 9723 |
| © | : | ஆசிரியருக்கு |
| பதிப்பு | : | ஏப்ரல் 2010 |
| பக்கம் | : | 24 |
| அச்சிட்டோர் | : | கரிகணன் பிரிண்டேர்ஸ்,<br>காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். |
| விலை | : | 50/- |
| Title | : | Malalai Pakkal |
| Author | : | 'Sithampara paththini'<br>M.M School Lane,<br>Annaicoddai.<br>T.P: 021 222 9723 |
| © | : | Author |
| Edition | : | April 2010 |
| Page | : | 24 |
| Printing | : | Harikanan Printers<br>K.K.S. Road, Jaffna.<br>021 222 2717 |
| Price | : | 50/- |



# திருமதி பரமேஸ்வரி சிவானந்தன்

(ஓய்வு பெற்ற ஆசிரியை)

மண்ணில்
26.04.1935

விண்ணில்
31.03.2010





# அம்மா

அம்மா என்றால் அன்பு
அழியா உண்மை நம்பு
அகத்தில் காணும் பண்பு
அணைப்பில் வருமே தென்பு

காலை குளிக்க வார்ப்பாள்
கனிவாய் உடைகள் அணிவாள்
பாலை சூடாய் எடுத்து
பருகத் தருவாள் அன்னை

பாலர் பாடம் படிக்க
பரிவாய் சொல்லித் தருவாள்
மாலை வேளை வந்தால்
மடியில் தூங்க வைப்பாள்



# பாட்டி

பாட்டி எங்கள் பாட்டி
பழம் போல் கனிந்த பாட்டி
காலை மாலை தினமும்
கோயில் போகும் பாட்டி

மடியில் வைத்து என்னை
உணவு ஊட்டும் பாட்டி
மனதுக் கிதமாய் கதைகள்
நாளும் புதிதாய் சொல்வாள்

எண்ணும் எழுத்தும் எனக்குச்
சொல்லித் தருவாள் பாட்டி
என்றும் இங்கு இருந்தால்
கவலை இல்லை எனக்கு.




# அன்பு

அன்பே எங்கள் தெய்வம்
அறிவே எங்கள் ஜீவன்
நன்றே கற்போம் கல்வி
நலமே வாழ்வோம் என்றும்

அன்பைப் போலப் பெரிதும்
உலகில் எதுவும் இல்லை
இன்பம் யாவும் தருமே
இனிய சுகமும் பெறுவோம்

அம்மா அன்பு நித்தம்
அப்பா அன்பு முத்தம்
அக்கா அன்பு பட்சம்
அண்ணா அன்பு மிச்சம்




# ஏழு சகோதரர்கள்

அதோபார் அதோபார்
ஏழுபேர் ஒன்றாய் வருவதைப்பார்
ஏழுபேரும் எத்தனை அழகு
இருந் திருந்துணவு உண்பதைப் பார்

ஒன்றை விட்டொன்று பிரிவதில்லை
ஒன்றை விட்டுணவும் உண்பதில்லை
எத்தனை காதம் சென்றாலும்
ஒருவரை ஒருவர் பிரிவதில்லை

அணு அணுவாகக் கிடைத்தவற்றை
பொறுமையாய் அலகால் பொறுக்குது பார்
கிணு கிணு கிணு கிணு என இசைத்து
தமக்குத் தாமே பாடுது பார்

ஏழு சகோதரர் இவர் அன்றோ
ஒற்றுமைக் குதாரணம் இவரன்றோ
ஒற்றுமை என்பதை இவரிடத்தில்
மனிதரும் மெல்லக் கற்போமா




# என் நண்பர்கள்

கண்ணன் சிவன் ராமனாம்
எந்தன் உயிர்த் தோழராம்
பந்தை நான் எறிந்திட
பறந்து சென்று பிடிப்பராம்

அண்ணன் தம்பி போலவும்
அன்புத் தோழர் போலவும்
இன்பம் தந்து காத்திடும்
நன்றி உள்ள நண்பராம்

பேரைச் சொல்லி அழைத்ததும்
வாலைக் குழைத்து வருவராம்
முன்னங் காலைத் தூக்கியே
மெல்ல வணக்கம் சொல்வராம்

வெளியில் யாரும் வந்திடில்
வேங்கை போலப் பாய்வாராம்
தூங்க மாட்டா இரவினிலே
துணிச்ச லுள்ள நண்பராம்



# இளங்கன்று

கன்றுக் குட்டி கன்றுக் குட்டி
காற்றைப் போல ஓடும் குட்டி
நேற்று வரை எங்கிருந்தாய்
இன்று இங்கு பிறந்துவிட்டாய்

பிறந்ததுமே எழுந்து நின்று
வாலைத் தூக்கி ஓடுகிறாய்
ஜால வித்தை இதையுனக்குச்
சொல்லித் தந்த தலைவன் யார்?

எத்தனை பேர் இருந்தாலும்
அம்மா பக்கம் ஓடுகிறாய்
சும்மா சொல்லக் கூடாது
அம்மாவின்மேல் பாசந்தான்



# எனது பூனை

புள்ளி புள்ளி பூனை
துள்ளி துள்ளி வருகுது
மெல்ல மெல்ல பாலை
நக்கி நாவால் பருகுது

கள்ளம் இல்லா பூனை
கண்கள் மின்னும் பூனை
என்னை பார்த்து மெல்ல
கண்ணை சிமிட்டும் பூனை

தன்னை தானே சுத்தம்
நன்கு செய்யும் பூனை
மெல்லப் பாய்ந்து எலியை
கௌவிக் கொல்லும் பூனை



# எங்கள் இனிய ஆசிரியை

அன்னைபோல அருகில் வந்து
அன்பாய் பாடம் சொல்லுவார்
இன்னும் அவர் இனிய குரல்
எங்கள் நெஞ்சில் ஒலிக்குதே

எண்ணின் அருமை எழுத்தின் பெருமை
அனைத்தும் விளங்கச் செய்தாரே
எந்த நாளும் சிறுவர் நாங்கள்
மகிழக் கல்வி தந்தாரே.

பாடசாலை போகும் போதும்
வரும்போதும் எம்மை
வீதி ஓரம் கவனமாகப்
பார்த்துப் போங்கள் என்பாரே




# அப்பா

அப்பா நல்ல அப்பா
அஞ்சா நெஞ்ச அப்பா
பிஞ்சு மழலை எம்மை
கொஞ்சித் தூக்கும் அப்பா

கல்விச் செல்வம் ஒன்றே
என்றும் நிலைக்கும் என்பார்
கடமை உணர்வி னோடு
கற்றுத் தருவார் பாடம்

மனதில் அன்பு பேணி
மமதை நீங்கி வாழ
புதுமை யாவும் அறிய
பலவுங் கற்றுத் தருவார்



# அணிலும் பூனையும்

மாதுளங் காய் மரத்திலே
மாறி மாறி அணில் எல்லாம்
காய் பழமாய்க் கொந்தின
பழங்கள் அழிந்து போயின.

அணிலைக் கலைக்க அம்மாவும்
என் னென்னவோ செய்திட்டாள்
அதுவும் பலன் அளிக்காமல்
மனம் உடைந்து போனாளே

இதனைக் கண்ட பூனைக்குட்டி
மெல்ல மெல்ல மரம்ஏறி
தினம் ஒவ்வோர் அணிலாகப்
பிடித்து வந்து போட்டதாம்

அதன்பின் அணில்கள் வரவில்லை
பழங்கள் முற்றிப் பழத்தன
வீட்டின் சொந்த அம்மாவும்
பூனையைத் தடவி மகிழ்ந்தாளாம்



# அகரம் பாடுவோம்

அன்னைபோல் தெய்வம் அனுதினமும் வணங்கு
ஆண்டவன் அருளால் அனைத்தும் பெறலாம்
இன்சொல் கூறுதல் என்றுமே நல்லது
ஈதல் நல்லறம் இன்றே பழகு

உயர்வை நினை உன்னதம் கிட்டும்
ஊர் பெயர்வாழ உத்தமனாயிரு
எங்கும் எதிலும் சிந்தித்துச் செயற்படு
ஏதிலி யெவர்க்கும் உறவாய் உதவு

ஐயந்திரிபற அனைத்தையும் கல்
ஒல்காப் புகழ்பெற ஒப்புரவொழுகு
ஓசை இசையெலாம் இறைவனின் வடிவே
ஔவையார் போதனை அகத்தினிற் கொள்
அஃறிணைக்குள்ளும் உயிருண்டு நேசி



# தெய்வம்

எங்கள் குல தெய்வம்
எம்மைக் காக்கும் தெய்வம்
எந்த வினை வரினும்
எளிதில் போக்கும் தெய்வம்

அன்பு கொண்ட எம்மை
ஆதரிக்கும் தெய்வம்
இன்ப சுகம் யாவும்
இசைந் தளிக்கும் தெய்வம்

எந்த மதமும் நன்றே
கூறும் தெய்வம் ஒன்றே
பேதம் எதுவும் இல்லை
உண்மைத் தெய்வம் ஒன்றே.



# கணினியும் அப்பாவும்

கணனி ஒன்று வாங்கித் தந்தார்
கருணை உள்ள அப்பா
கடிதில் உலக அதிசயங்கள்
காண வைத்தார் அப்பா

கணனி காட்டும் காட்சிகளோ
கணக்கில் அடங்கா ஆயிரம்
நினைத்த போதே விரும்பும் யாவும்
கணத்தில் பார்க்க வைத்தார்

எந்த நாட்டில் என்னகாட்சி
உடனே நாமும் காணலாம்
எந்த நாட்டில் என்னசெய்தி
அதையும் உடனே கேட்கலாம்

உனக்கும் எனக்கும் தெரிந்திராத
உலகின் அரிய விந்தையும்
இமைக்கும் நேரம் இமயமும்
கண்முன் காட்டும் அதிசயம்

எந்த ஊரின் எந்த உறவும்
முகமும் பார்த்துக் கதைக்கலாம்
எந்த நாட்டின் எந்தச் செயலும்
இணையத் தளத்தில் பார்க்கலாம்.



# கோபுர தரிசனம்

ஊரில் உயர்ந்ததும் கோபுரந்தான்
கோயிலில் உயர்ந்ததும் கோபுரந்தான்
கோபுர தரிசனம் செய்து வந்தால்
நன்மைகள் நாளும் நடந்திடுமே

அழகழகான பொம்மைகளும்
பழம் பெரும் சரித்திர உண்மைகளும்
நிஜமென எவரும் நம்பிவிட
அழகிய சிற்பங்கள் கதைகள் சொலும்

கோபுர தரிசனம் கோடி புண்ணியம்
ஆதியில் ஆன்றோர் பகர்ந்த வாக்கியம்
நாளும் பொழுதும் கோபுரம் தொழுதால்
நாமும் நலமுடன் நன்கு வாழலாம்.



# தேனீ

சின்னச் சின்னத் தேனீ
சிற கடிக்கும் தேனீ
சின்னச் சின்னப் பூவில்
சிறிதாய் தேனை நுகரும்

மருத மரம் என்ன
வேப்பம் மரம் என்ன
மிச்சம் இல்லை மரங்கள்
தாவும் எல்லா மரமும்

மாமரப் பூந் தேனும்
பலாவின் பூவின் தேனும்
மாதுளம் பூத் தேனும்
மணம் இனிக்கச் சேர்க்கும்

தனக் கெனவே வீடும்
தேன் வதையாய் கட்டும்
பாவம் இந்த மனிதன்
தேனைப் பிழிந் துண்பான்.



# மீன் தொட்டி

வண்ண வண்ண நிறங்களில்
வகை வகையாய் மீன்கள் பார்
என்ன என்ன அதிசயம்
எகிறி எகிறிக் குதிக்குதே

கண்ணுக் கினிய காட்சிகள்
கனவோ கற்பனைக் காட்சியோ
மஞ்சள் பச்சை பலவர்ணம்
மனதைக் கவரும் மீன்களைப் பார்

பளிங்கு போன்று கண்ணாடி
பளபள எனவே மீன்கள்பல
அலைபோல மேலெழும் நீர்க்குமிழ்கள்
அருவி போலச் சொரியுதுபார்

வெளியே எடுக்க ஆசைதான்
எடுத்தால் உயிரும் போய்விடுமே
அக்கா சொன்னாள் அதுபாவம்
அழகை மட்டும் ரசித்திடுவோம்



# சூரியோதயம்

கருமை கலையுது
பொழுது புலருது
பொன்னூஞ்சல் ஒன்று
புதிதாய் தெரியுது
ஆரஞ்சும் சிவப்பும்
கலந்த கடலிலே
செம்பவளப் பந்து
மேலே மிதக்குது
அடடா இது என்ன அதிசயம்!
ஆதவன் வருகையின் அற்புதம்!
இதுதான் சூரிய உதயமா
இதை நாம் வாழ்வினில் மறப்பமா?



# மல்லிகை

வெள்ளை வெள்ளை மல்லிகை
வெளிச்சம் போடும் மல்லிகை
மாலை நேரம் வந்ததும்
மலர்ந்து மணம் வீசுமே

பாலைப் போன்ற வெண்மையும்
பளிங்கு போன்ற தன்மையும்
கொத்து கொத்தாய் மலர்வதும்
முற்றத்திற் கோர் அழகுதான்.



# புது வீடு

சின்னக் கண்ணன் அப்பாவுடன்
கடலைப் பார்க்கச் சென்றான்
கடற்கரையின் மணல் அழகில்
அப்பாவுடன் அமர்ந்தான்

ஈரமணலில் காலை வைத்து
அப்பா வீடு கட்டியதும்
சின்னக் கண்ணன் தானும் ஒரு
சின்னவீடு கட்டினான்.

எங்கோ இருந்து வந்த அலை
கண்ணன் வீட்டைக் கலைத்ததாம்
அழுகை வந்த கண்ணனின்
முதுகை அப்பா தடவியே
கவலை வேண்டாம் புதிய வீடு
கட்டுவோமே என்றாராம்.



# ஆசிரியைக்கு

அன்புள்ளங் கொண்ட ஆசிரியைக்கு
நாங்கள் பாடும் பாடல் இது
அந்த நாள் ஞாபகம் நெஞ்சில் இனிக்குது
உங்களின் பாடங்கள் நினைவில் இருக்குது

எண்களும் எழுத்தும் எத்தனை சிறப்பாய்
எம்நெஞ்சில் பதிய வைத்தீர்களே
என்றென்றும் உங்கள் உயர்ந்த பண்பு
எம்மிடம் பதிய வைத்தீர்களே

ஞானமும் வேதமும் நல்மனதென்றே
ஞானத்தாயாக உணர்த்தி நின்றீர்
மோனத்தில் அன்று உரைத்ததெலாம்
ஜன்மம் வரையிலும் நாம்மறவோம்



# இனிய தமிழ்

எங்கள் தமிழ் இனிய தமிழ்
முத்தமிழாய் வளர்ந்த தமிழ்
ஆத்திசூடி கொன்றைவேந்தன்
ஔவையார் தந்த தமிழ்
வள்ளுவரின் குறளமுதம்
வாழ்வாங்கு வாய்த்த தமிழ்
அப்பரும் சுந்தரரும் சம்பந்தரும் பரவசமாய்
பண்ணோடு தந்த தேவாரம் தெய்வத்தமிழ்
ஆதிசிவன் அருள்பெற்ற மணிவாசகர்பொழிந்த
தேன் திருவாசகம் தெவிட்டாத தீந்தமிழ்
புதுப்புதுச் சந்தங்கள் புதிதாய் மெருகூட்ட
அருணகிரி மொழிந்ததுவோ திருப்புகழ் சந்தத் தமிழ்
திருமூலர் திருமந்திரம் ஞானத்தால் வந்த தமிழ்
பட்டினத்தார், தாயுமானவர், வள்ளலார்
உயிர்களுக்காம் அருளியவை அருள்மொழிகள்
முக்காலமும் உணர்ந்த பதினெண்சித்தர் பாடியவை
முத்துக்கள் நிறைந்த தமிழ்
முத்திக்கு வழிகாட்டும் தமிழ்





# செல்லக்குட்டி

எந்தன் செல்லக்குட்டி
மஞ்சள் பூனைக் குட்டி
குறும்பு பல செய்வான்
லக்சன் அவன் பெயராம்

நான் இல்லாதபோது
வேறு துணை இன்றி
நாயின் அர வணைப்பில்
நன்கு தூங்கும் பூனை

காலை ஐந்து மணிக்கு
பால் கொடுக்க பிந்தின்
தலையணையில் ஏறி
குனிந்து கொஞ்சும் பூனை

வில்லன் வந்து விட்டான்
மெல்லச் சொல்லி அப்பா
செல்ல மாகத் தட்ட
விழுந்து ஓடிப் போவான்

ரெலிபோன் மணி அடித்தால்
பாய்ந்து ஓடி வருவான்
நானும் கதைக்க விடாமல்
வயரைப் பிடித்து இழுப்பான்

S. SIVATHASAN
JUSTICE OF THE PEACE
Regd. 03/01/NE/JAF/B/297
No:58, CANAGARATNAM ROAD
ARIYALAI, JAFFNA, SRI LANKA

S. SIVATHASAN
JUSTICE OF THE PEACE
Regd. 03/01/NE/JAF/B/297
No.58, CANAGARATNAM ROAD
ARIYALAI, JAFFNA, SRI LANKA



அருட் சோதித் தெய்வம்

எமை ஆண்டுகொண்ட தெய்வம்

இருட்பாடு நீக்கி

ஒளி ஈந்தருளும் தெய்வம்.



Harikanan, Jaffna.